# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | ஜனவரி 1991 | இதழ் 1



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

**2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.**

ஜெபியுங்கள்! பங்கு கொள்ளுங்கள்!

## திருமறை ஆசான் அன்புடன் அழைக்கிறது

*நிகழ்ச்சி* : திருமறை ஆசான் 4வது ஆண்டு விழா
&
வாசகர்கள் கருத்தரங்கம்

*நாள்* : 26-1-1991 சனிக்கிழமை

*நேரம்* : காலை 9மணி முதல் மாலை 5மணி வரை

*இடம்* : கிறிஸ்தவ தியான மைய வளாகம் (முருங்கப்பேட்டை மான்சிங் பங்களா)

*வரும் வழி* : திருச்சி மெயின் கார்டு கேட் நகரப்-நிலையத்திலிருந்து கரூர் செல்லும் மார்க்கம்.

*தூரம்* : 5 கி.மீ.

*பஸ்கட்டணம்* : 75 பைசா மட்டும்

*அனுமதி இலவசம்!* *அனைவரும் வாரீர்!*

## இதழின் உள்ளே


1. திருமறை ஆசான் வாசக அன்பர்களே, திருச்சி வாரீர்! 1–2
2. கனி கொடுக்கும் காலம் நெருங்கிவிட்டது 3-6
3. ஜெபத்தின் அவசியம் 7-8
4. நீங்கள் கிறிஸ்துவுகுள் இருக்கிறீர்களா? 9-10
5. ''ஐயா இது இந்த வருஷமும் இருக்கட்டும்'' லூக் 13:8 11-14
6. இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் மனிதனுடைய பங்கும் 15-24
7. புத்தாண்டில் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் 25-28

# THIRUMARAI AASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 4. Jan—1991 Issue 1


**ஆசிரியவுரை**

## திருமறை ஆசான் வாசக அன்பர்களே, திருச்சி வாரீர்!

திருமறை ஆசான் வாசக சகோதர, சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கர்த்தருக்குச் சித்தமானால், வருகிற 26-1-1991 சனிக்கிழமை குடியரசுத் திருநாளன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திருமறை ஆசானின் நான்காவது ஆண்டு விழாவும், வாசகர்களின் கருத்தரங்கமும் திருச்சி மாநகர் அருகில், காவிரியாற்றின் வலது கரையோரம் அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் கிறிஸ்தவ தியான மைய வளாகத்தில் (முருங்கப்பேட்டை மான்சிங் பங்களா) நடைபெறும்.

திருச்சி-கரூர் சாலையில் உள்ள இவ்விடம் திருச்சி சத்திரம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து (மெயின் கார்டு கேட்) 5 கிமீ தொலைவில் உள்ளது. இவ்விடத்திற்கு மெயின் கார்டு கேட்டிலிருந்து அடிக்கடி நகரப் பேருந்துகள் உண்டு. 10 நிமிஷம், 75 பைசா செலவில் மான்சிங் பங்களாவந்து அடையலாம். ஈரோடு கரூர் பகுதிகளிலிருந்து

பஸ்ஸிலும், இரயிலிலும் வரலாம், ரயிலில் வருகிறவர்கள் திருச்சி ஈரோடு மார்க்கத்தில் முத்தரச்ச நல்லூர் ரயில் நிலையத்தில் இறங்கி மூன்றே நிமிஷத்தில் நடந்தே மான்சிங் பங்களா வந்து அடையலாம்.

★ கலந்து கொள்ளும் அனைவருக்கும் கருத்துச் சொல்ல உரிமை உண்டு. காலம் போதாது என்பதால் கருத்துச் சொல்ல விரும்புகிறவர்கள் முன் கூட்டியே கடிதத்-தொடர்பு கொண்டு தங்கள்விருப்பத்தைத் தெரிவித்தால் வாய்ப்பு அளிக்கப்படும். கருத்துகளை எழுத்து மூலமாகக்கொடுக்க விரும்புகிறவர்களும் கொடுக்கலாம்.

★ வேதாகமம் சம்பந்தப்பட்ட கேள்விகள், சந்தேகங்கள் இருந்தால் கேட்டுத் தெளிவு பெறலாம். அதற்கென்று நேரம் ஒதுக்கப்படும்.

★ தாய் குலத்துக்குத் தனி இடம் உண்டு.

★ கலந்து கொள்ளுவர்களுடைய மதிய உணவுத் தேவைகள் சந்திக்கப்படும்.

★ இது ஒரு பிக்னிக் ஸ்பாட். நகர வாழ்க்கைக்கே உரிய ஜன நெருக்கம், சந்தடி, போக்குவரத்து நெரிசல் ஆகிய தொல்லைகளிலிருந்து ஒதுங்கி இயற்கை வனப்பு மிக்க அமைதிச் சூழலில் ஆண்டவரின் பாதத்தில் அமரும் ஓர் அருமையான வாய்ப்பு அனுபவித்து மகிழ வாரீர்!

*அன்புடன்*

**சகோ. E.Z. செல்வநாயகம்,**

*தொடர்பு முகவரி*

| 20-1-91 வரை | 21-1.91 முதல் 26-1-91 வரை, |
|---|---|
| **S. ஆனந்த ராஜ்,** | **P. பால்ராஜ்,** |
| C/o திருமறை ஆசான், | 14, திருநகர். |
| 2, மணல்மேடு வீதி, | கருமண்டபம்' |
| ஈரோடு-638002. | திருச்சி-620001, |

பி.கு. வாசகர்கள் அல்லாதவர்களும் வந்து கலந்து கொண்டு வாசகராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

# கனி கொடுக்கும் காலம் நெருங்கி விட்டது

இன்றைக்கு சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது கி.பி. 33ல் எருசலேம் என்னும் மாநகரில் கர்த்தருடைய சபை உதயமாயிற்று. (அப் 2) அங்கே தொடங்கி, யூதேயாவிலும், சமாரியாவிலும் பின்னர் உலகத்தின் கடைசி பரியந்தமும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க இன்று அது படிப்படியாக வளர்ந்து உலகம் முழுவதும் வியாபித்து நிற்கிறது.

வரலாற்று ஆசிரியர்கள் கூற்றுப்படி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான அப்போஸ்தலன் தோமா என்பவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை இந்தியாவுக்குக் கொண்டு வந்து சிற்சில சபைகளை ஸ்தாபித்தார் என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கும் அவைகளின் நினைவுச் சின்னங்களாக சிற்சில அமைப்புகள் கேரளப்பகுதியில் காணப்படுகின்றன. ஆனால் அவைகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஸ்தாபித்த சபையின் அச்சடையாளங்களை இழந்து வித்தியாசமாகக் காணப்படுகின்றன.

இதற்கு வெகுகாலத்துக்குப்பிறகு, 18 ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19 ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த சில அமெரிக்க அருட்பணியாளர்கள் சுத்த சுவிசேஷத்தைச் சுமந்து வந்து இங்கே சில புதிய ஏற்பாட்டுச் சபைகளை நிறுவி அவைகளை நடத்திச் செல்ல சில இந்திய சகோதரர்களை நியமித்து ஊதியம் கொடுத்தனர். கால சூழ்நிலையால் அவ்வருட்பணியாளர்கள் தாயகத்துக்குத் திரும்பி சென்றதாலும், தொடர்ந்து ஊழியத்தை ஆதரிக்க முடியாமற் போனதாலும், ஊழியம் வளர்ச்சியடையாதது மட்டுமல்ல, நாளடைவில் தேய்ந்து மறைந்தும் போயிற்று.

காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றது சுமார் 1950, 60 வாக்கில் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள ஷில்லாங் என்ற பகுதியில் வாழ்ந்து வரும் சில பெயர் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி வேதத்தை ஆய்வு செய்து பார்த்ததில், அவர்களுடைய அணுகுமுறைகளில் அநேகம் வேதத்துக்கு முரண்பாடாக இருப்பதை அறிந்து வேதனைப் பட்டு, தங்களுடைய அணுகுமுறைகளை வேதாகம அடிப்படையில் அமைத்துக் கொள்ள வேண்டும் என தீர்மானித்து அவ்வாறே செயல்படத் தொடங்கினர். ஆரம்பத்தில் தாங்கள் மட்டுமே

அவ்வாறு செய்வதாக நினைத்தனர். ஆனால் உலகத்தின் வேறு சில பகுதிகளிலும் குறிப்பாக அமெரிக்காவிலும், கனடாவிலும் இதே போல் வேதாகமம் பேசுகிற இடத்தில் பேசுவோம். வேதாகமம் மௌனமாக இருக்கிற இடத்தில் நாங்களும் மௌனமாக இருப்போம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிற மக்கள் இருந்திருக்கிறார்கள் என்று பின்னர் தெரிந்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

இந்த நிலைமையில், கனடாவைச் சேர்ந்த சில அருட் பணியாளர்கள் இந்த ஷில்லாங் வாசிகளோடு தொடர்பு கொண்டு இவர்களுடன் இணைந்து செயல்பட்டனர். அதன் பின்னர் அவ்வருட்பணியாளர்கள் சென்னைக்கு வந்தனர். தொடர்ந்து கனடாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வேறு சில அருட்பணியாளர்களும் வருகை தந்து சுத்த சுவிசேஷத்தைப் பரப்ப முற்பட்டனர். அதன் விளைவாக அநேகர் மெய்க்கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டு, அநேக நகரங்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும் புதிய ஏற்பாட்டுச் சபைகளை தோற்றுவித்தனர்.

தொடர்ந்து சென்ற 25 ஆண்டு காலங்களாக புதிய ஏற்பாட்டுக் கிறுஸ்தவத்தைப் பரப்பும் முயற்சி முன்னைவிட தீவிரமடைந்து வருகிறது. அநேக மக்கள் நற்செய்தியைக் கேட்கவும், கீழ்ப்படியவும் முன் வந்து கொண்டிருக்கின்றனர். நூற்றுக்கணக்கான ஊழியர்களின் உழைப்பால் அங்கத்தினர்கள் பெருகி சபைகளும் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. இவைகளெல்லாம் வரவேற்கத் தக்க நல்ல அம்சங்கள்.

ஆனால் நாம் சிந்திக்க வேண்டிய தருணமும், கனி கொடுக்க வேண்டிய காலமும் வந்திருக்கிறதை நாம் ஒத்துக் கொண்டு நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற சவாலைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டும். இந்தியா ஒரு பெரிய நாடு. ஆகையால் சபைகள் விரைவில் தன்னிறைவு பெற்று மற்ற இடங்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பிராந்திய சபைகள் தங்கள் ஊழியர்களை தாங்களே தாங்குவதற்கு வசதியாக அங்கத்தினர்கள் தாராளமாய் ஆண்டவருக்குக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் எஞ்சியிருக்கிற ஏராளமான மக்களை எப்படிச் சந்திக்க முடியும்? சத்தியத்தின் வலிமையை நன்கு புரிந்து கொண்டு செயல் படவேண்டும். நம் நாட்டு மக்களுக்கு சத்தியத்தை எடுத்துரைப்பது நம்முடைய கடமை என்ற உணர்வு ஏற்படவேண்டும்.

பிரசங்கிமார்கள் தங்களுடைய சுய சௌகரியங்களையே தேடிக் கொண்டிராமல் கர்த்தருக்குத் தங்களை முழுமையாய்

ஒப்புக் கொடுத்து வாழ வேண்டும். நமக்கு ஆத்தும பாரமுள்ள அருட்பணியாளர்கள் தேவை. கூலிக்கு மாரடிக்கிற மனப்பான்மை மாற வேண்டும். ஆத்தும ஆதாயம் செய்யும் ஆவல் இல்லாமல் அமெரிக்காவுக்குச் செல்லும் ஆசை உள்ளவர்களால் இம்மாபெரும் பணியை நிறைவேற்ற முடியாது சந்தர்ப்பம் வந்தால் தன் உயிரை-யும் பணயம் வைக்கத் தயங்காத தியாகச் செம்மல்கள் தேவை. சொத்து சேர்க்கவும், சுகபோகத்தில் உழலவும் விரும்பும் போக்குக் கூடாது. ஊழியத்தில் ஒருவருக்கொருவர் துணை நிற்கும் ஊழிய வாஞ்சையுள்ள சகோதரர்கள் தேவை நம்மில் எவன் பெரியவன் என்ற சண்டையில் இயேசு கிறிஸ்துவைத் தலைகுனிய வைக்கும் கீழ்மைக் குணம் கிஞ்சித்தும் இருக்கக் கூடாது.

நாடெங்கிலும் உள்ள ஊழியர்கள் ஒருவருக் கொருவர் இணைந்து, கரம் சேர்த்துக் கொண்டு ஒருவரை யொருவர் உற்-சாகப் படுத்தக் கூடிய உயர்ந்த கிறிஸ்தவ நெறிகளைப் பின்பற்ற வேண்டும். நம்முடைய பணிகளைத் திட்டமிட்டு, அழிவை நோக்கி வேகமாய் ஓடிக் கொண்டிருக்கும் 'ஆத்துமாக்களை தடுத்து நிறுத்தி மீட்க அயராது பாடுபடவேண்டும். அது மட்டும் அல்ல. நம்மு-டைய அண்டை நாடுகளுக்குக் கூட சுவிசேஷம் அறிவிப்பது நம்-முடைய கடமை. இப்படியெல்லாம் சொன்னால் ''நாங்கள் மிக-வும் ஏழைகள்'' என்று ஏகக் குரலில் 'கோரஸ்' பாடுகிறோம். ஆனால் மகன் அல்லது மகளின் திருமணத்தைத் தடபுடலாக நடத்துவதற்கும் தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, கார், பங்களா வாங்குவதற்கும், நமக்கு முடிகிறது. தங்களுடைய வசதி-களைப் பெருக்கிக் கொள்வதற்கு எதையும் செய்ய முடிகிற சகோ-தரர்கள் கர்த்தருடைய காரியங்கள் என்று வரும்போது வறுமைக் கோட்டிற்கும் கீழே ஏதாவது கோடு இருக்கிறதா? என்று தேடிப் பார்த்து அதற்குள் ஒளிந்து கொள்ளப் பார்க்கிறோம். சகோதரர்-களே, நம்மை நாமே உணர்ந்து பார்த்து நமக்கு முன்பாக இருக்கும் சவாலைச் சந்திக்க ஆயத்தமாவோம்.

குழந்தைகள் பிறக்கும்போதே முழு வளர்ச்சியடைந்த நப-ராகப் பிறப்பதில்லை என்பது உண்மை. அதே போல கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட உடனே ஆவியில் முழு வளர்ச்சியடைந்தவர்-களாக இருக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கக் கூடாது தான். ஆனால் அதற்கும் ஒரு எல்லைக் கோடும் ஒரு விதிமுறையும் உண்டே. காலமெல்லாம் நாம் பிறர் கையை எதிர்பார்க்கிற குழந்-தைகளாக இருக்கக் கூடாதே. அந்தந்தக் கால கட்டத்தில் உரிய வளர்ச்சி தென்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பும் நியாயமுமாகும். அதே காரியம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பொருந்தும்.

சபைகள் வளர்ந்து உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் பெருகும்போது தங்கள் ஊழியர்களைத் தாங்களே தாங்கவும் சபை உறுப்பினர்களின் சரீரப் பிரகாரமான தேவைகளைச் சந்திக்கவும், குழந்தைகளின் கல்வித் தேவைகளைச் பூர்த்தி செய்யவும் விதவைகளை ஆதரிக்கவும், அனாதைகளைப் பராமரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த முயற்சிகளைத் தங்கள் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு தொடங்கவும் பராமரிக்கவும் வேண்டும். அப்படிச் செய்யாமல் தொட்டதற்கெல்லாம் பிறர் கையை எதிர்ப்பார்ப்பது விரும்பத் தக்கதல்ல.

இக் கால் நூற்றாண்டுப் பணியை சீர்தூக்கிப் பார்க்கும் போது சில பல முன்னேற்றங்கள் தென்படாமல் இல்லை. ஆனால் அது போதாது. நம்முடைய நாட்டின் மக்கள் தொகையைக்கருத்தில் கொண்டு பார்க்கும்போது நாம் செய்திருக்கிற பணி கடுகளவு; செய்ய வேண்டியவை மலையளவு. ஆகவே இன்னும் அதிக முயற்சியும், தியாகமும், வேகமும் தேவை.

வானொலி மற்றும் பத்திரிக்கைகள் வாயிலாகச் செய்யப் படுகிற பணிகளினால் ஏற்படும் எழுச்சிகளை, ஆங்காங்கே ஊழியம் செய்யும் சகோதரர்கள் பயன்படுத்தி, மேலும் இப்படிப்பட்ட மக்களைச் சந்தித்து, சத்தியத்தை அதிகத் திட்டமாய் உபதேசித்து கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளத் தூண்ட வேண்டும். இது யாரோ செய்கிற பணி நாம் ஒத்துழைப்புக் கொடுத்து அவனை ஏன் பெரிய மனுஷனாக்க வேண்டும் என்கிற காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

கடைசியாக ஒரு கேள்வி :

இன்னும் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சபையின் வளர்ச்சி எப்படி இருக்கும்?

அது நீங்களும் உங்கள் உபதேசத்தைக் கேட்கிறவர்களும் எப்படி நடந்து கொள்கிறீர்களோ அதைப் பொறுத்துத் தான் இருக்கும். கர்த்தர் தம்முடைய பணியைச் செய்கிறார். மற்றவர்களும் கணிசமான அளவு கை தாங்குகிறார்கள். மீதம் உங்கள் கையில்.

J. C. சோட்

# கனி கொடுக்கும் காலம் நெருங்கி விட்டது

இன்றைக்கு சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது கி.பி. 33ல் எருசலேம் என்னும் மாநகரில் கர்த்தருடைய சபை உதயமாயிற்று. (அப் 2) அங்கே தொடங்கி, யூதேயாவிலும், சமாரியாவிலும் பின்னர் உலகத்தின் கடைசி பரியந்தமும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க இன்று அது படிப்படியாக வளர்ந்து உலகம் முழுவதும் வியாபித்து நிற்கிறது.

வரலாற்று ஆசிரியர்கள் கூற்றுப்படி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான அப்போஸ்தலன் தோமா என்பவர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை இந்தியாவுக்குக் கொண்டு வந்து சிற்சில சபைகளை ஸ்தாபித்தார் என்று சொல்லப் படுகிறது. இன்றைக்கும் அவைகளின் நினைவுச் சின்னங்களாக சிற்சில அமைப்புகள் கேரளப்பகுதியில் காணப்படுகின்றன. ஆனால் அவைகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஸ்தாபித்த சபையின் அச்சடையாளங்களை இழந்து வித்தியாசமாகக் காணப்படுகின்றன.

இதற்கு வெகுகாலத்துக்குப்பிறகு, 18 ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19 ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த சில அமெரிக்க அருட்பணியாளர்கள் சுத்த சுவிசேஷத்தைச் சுமந்து வந்து இங்கே சில புதிய ஏற்பாட்டுச் சபைகளை நிறுவி அவைகளை நடத்திச் செல்ல சில இந்திய சகோதரர்களை நியமித்து ஊதியம் கொடுத்தனர். கால சூழ்-நிலையால் அவ்வருட்பணியாளர்கள் தாயகத்துக்குத் திரும்பி சென்றதாலும், தொடர்ந்து ஊழியத்தை ஆதரிக்க முடியாமற் போனதாலும், ஊழியம் வளர்ச்சியடையாதது மட்டுமல்ல, நாளடைவில் தேய்ந்து மறைந்தும் போயிற்று.

காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றது சுமார் 1950, 60 வாக்கில் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள ஷில்லாங் என்ற பகுதியில் வாழ்ந்து வரும் சில பெயர் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி வேதத்தை ஆய்வு செய்து பார்த்ததில், அவர்களுடைய அணுகுமுறைகளில் அநேகம் வேதத்துக்கு முரண்பாடாக இருப்பதை அறிந்து வேதனைப் பட்டு, தங்களுடைய அணுகுமுறைகளை வேதாகம அடிப்படையில் அமைத்துக் கொள்ள வேண்டும் என தீர்மானித்து அவ்வாறே செயல்படத் தொடங்கினர். ஆரம்பத்தில் தாங்கள் மட்டுமே

அவ்வாறு செய்வதாக நினைத்தனர். ஆனால் உலகத்தின் வேறு சில பகுதிகளிலும் குறிப்பாக அமெரிக்காவிலும், கனடாவிலும் இதே போல் வேதாகமம் பேசுகிற இடத்தில் பேசுவோம். வேதாகமம் மௌனமாக இருக்கிற இடத்தில் நாங்களும் மௌனமாக இருப்போம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிற மக்கள் இருந்திருக்கிறார்கள் என்று பின்னர் தெரிந்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

இந்த நிலைமையில், கனடாவைச் சேர்ந்த சில அருட் பணியாளர்கள் இந்த ஷில்லாங் வாசிகளோடு தொடர்பு கொண்டு இவர்களுடன் இணைந்து செயல்பட்டனர். அதன் பின்னர் அவ்வருட்பணியாளர்கள் சென்னைக்கு வந்தனர். தொடர்ந்து கனடாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வேறு சில அருட்பணியாளர்களும் வருகை தந்து சுத்த சுவிசேஷத்தைப் பரப்ப முற்பட்டனர். அதன் விளைவாக அநேகர் மெய்க்கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டு, அநேக நகரங்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும் புதிய ஏற்பாட்டுச் சபைகளை தோற்றுவித்தனர்.

தொடர்ந்து சென்ற 25 ஆண்டு காலங்களாக புதிய ஏற்பாட்டுக் கிறுஸ்தவத்தைப் பரப்பும் முயற்சி முன்னைவிட தீவிரமடைந்து வருகிறது. அநேக மக்கள் நற்செய்தியைக் கேட்கவும், கீழ்ப்படியவும் முன் வந்து கொண்டிருக்கின்றனர், நூற்றுக்கணக்கான ஊழியர்களின் உழைப்பால் அங்கத்தினர்கள் பெருகி சபைகளும் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. இவைகளெல்லாம் வரவேற்கத் தக்க நல்ல அம்சங்கள்.

ஆனால் நாம் சிந்திக்க வேண்டிய தருணமும், கனி கொடுக்க வேண்டிய காலமும் வந்திருக்கிறதை நாம் ஒத்துக் கொண்டு நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற சவாலைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டும். இந்தியா ஒரு பெரிய நாடு. ஆகையால் சபைகள் விரைவில் தன்னிறைவு பெற்று மற்ற இடங்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பிராந்திய சபைகள் தங்கள் ஊழியர்களை தாங்களே தாங்குவதற்கு வசதியாக அங்கத்தினர்கள் தாராளமாய் ஆண்டவருக்குக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் எஞ்சியிருக்கிற ஏராளமான மக்களை எப்படிச் சந்திக்க முடியும்? சத்தியத்தின் வலிமையை நன்கு புரிந்து கொண்டு செயல் படவேண்டும். நம் நாட்டு மக்களுக்கு சத்தியத்தை எடுத்துரைப்பது நம்முடைய கடமை என்ற உணர்வு ஏற்படவேண்டும்.

பிரசங்கிமார்கள் தங்களுடைய சுய சௌகரியங்களையே தேடிக் கொண்டிராமல் கர்த்தருக்குத் தங்களை முழுமையாய்

ஒப்புக் கொடுத்து வாழ வேண்டும். நமக்கு ஆத்தும பாரமுள்ள அருட்பணியாளர்கள் தேவை. கூலிக்கு மாரடிக்கிற மனப்பான்மை மாற வேண்டும். ஆத்தும ஆதாயம் செய்யும் ஆவல் இல்லாமல் அமெரிக்காவுக்குச் செல்லும் ஆசை உள்ளவர்களால் இம்மாபெரும் பணியை நிறைவேற்ற முடியாது சந்தர்ப்பம் வந்தால் தன் உயிரை-யும் பணயம் வைக்கத் தயங்காத தியாகச் செம்மல்கள் தேவை. சொத்து சேர்க்கவும், சுகபோகத்தில் உழலவும் விரும்பும் போக்குக் கூடாது. ஊழியத்தில் ஒருவருக்கொருவர் துணை நிற்கும் ஊழிய வாஞ்சையுள்ள சகோதரர்கள் தேவை நம்மில் எவன் பெரியவன் என்ற சண்டையில் இயேசு கிறிஸ்துவைத் தலைகுனிய வைக்கும் கீழ்மைக் குணம் கிஞ்சித்தும் இருக்கக் கூடாது.

நாடெங்கிலும் உள்ள ஊழியர்கள் ஒருவருக் கொருவர் இணைந்து, கரம் சேர்த்துக் கொண்டு ஒருவரை யொருவர் உற்-சாகப் படுத்தக் கூடிய உயர்ந்த கிறிஸ்தவ நெறிகளைப் பின்பற்ற வேண்டும். நம்முடைய பணிகளைத் திட்டமிட்டு, அழிவை நோக்கி வேகமாய் ஓடிக் கொண்டிருச்கும் 'ஆத்துமாக்களை தடுத்து நிறுத்தி மீட்க அயராது பாடுபடவேண்டும். அது மட்டும் அல்ல. நம்மு-டைய அண்டை நாடுகளுக்குக் கூட சுவிசேஷம் அறிவிப்பது நம்-முடைய கடமை. இப்படியெல்லாம் சொன்னால் ''நாங்கள் மிக-வும் ஏழைகள்'' என்று ஏகக் குரலில் 'கோரஸ்' பாடுகிறோம். ஆனால் மகன் அல்லது மகளின் திருமணத்தைத் தடபுடலாக நடத்துவதற்கும் தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, கார், பங்களா வாங்குவதற்கும், நமக்கு முடிகிறது. தங்களுடைய வசதி-களைப் பெருக்கிக் கொள்வதற்கு எதையும் செய்ய முடிகிற சகோ-தரர்கள் கர்த்தருடைய காரியங்கள் என்று வரும்போது வறுமைக் கோட்டிற்கும் கீழே ஏதாவது கோடு இருக்கிறதா? என்று தேடிப் பார்த்து அதற்குள் ஒளிந்து கொள்ளப் பார்க்கிறோம். சகோதரர்-களே, நம்மை நாமே உணர்ந்து பார்த்து நமக்கு முன்பாக இருக்கும் சவாலைச் சந்திக்க ஆயத்தமாவோம்.

குழந்தைகள் பிறக்கும்போதே முழு வளர்ச்சியடைந்த நப-ராகப் பிறப்பதில்லை என்பது உண்மை. அதே போல கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட உடனே ஆவியில் முழு வளர்ச்சியடைந்தவர்-களாக இருக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கக் கூடாது தான். ஆனால் அதற்கும் ஒரு எல்லைக் கோடும் ஒரு விதிமுறையும் உண்டே. காலமெல்லாம் நாம் பிறர் கையை எதிர்பார்க்கிற குழந்-தைகளாக இருக்கக் கூடாதே. அந்தந்தக் கால கட்டத்தில் உரிய வளர்ச்சி தென்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பும் நியாயமுமாகும். அதே காரியம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பொருந்தும்.

சபைகள் வளர்ந்து உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் பெருகும்போது தங்கள் ஊழியர்களைத் தாங்களே தாங்கவும் சபை உறுப்பினர்களின் சரீரப் பிரகாரமான தேவைகளைச் சந்திக்கவும், குழந்தைகளின் கல்வித் தேவைகளைச் பூர்த்தி செய்யவும் விதவைகளை ஆதரிக்கவும், அனாதைகளைப் பராமரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், இந்த முயற்சிகளைத் தங்கள் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு தொடங்கவும் பராமரிக்கவும் வேண்டும். அப்படிச் செய்யாமல் தொட்டதற்கெல்லாம் பிறர் கையை எதிர்ப்பார்ப்பது விரும்பத் தக்கதல்ல.

இக் கால் நூற்றாண்டுப் பணியை சீர்தூக்கிப் பார்க்கும் போது சில பல முன்னேற்றங்கள் தென்படாமல் இல்லை. ஆனால் அது போதாது. நம்முடைய நாட்டின் மக்கள் தொகையைக்-கருத்தில் கொண்டு பார்க்கும்போது நாம் செய்திருக்கிற பணி கடுகளவு; செய்ய வேண்டியவை மலையளவு. ஆகவே இன்னும் அதிக முயற்சியும், தியாகமும், வேகமும் தேவை.

வானொலி மற்றும் பத்திரிக்கைகள் வாயிலாகச் செய்யப் படுகிற பணிகளினால் ஏற்படும் எழுச்சிகளை, ஆங்காங்கே ஊழியம் செய்யும் சகோதரர்கள் பயன்படுத்தி, மேலும் இப்படிப்பட்ட மக்களைச் சந்தித்து, சத்தியத்தை அதிகத் திட்டமாய் உபதேசித்து கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளத் தூண்ட வேண்டும். இது யாரோ செய்கிற பணி நாம் ஒத்துழைப்புக் கொடுத்து அவனை ஏன் பெரிய மனுஷனாக்க வேண்டும் என்கிற காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

கடைசியாக ஒரு கேள்வி :

இன்னும் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு சபையின் வளர்ச்சி எப்படி இருக்கும்?

அது நீங்களும் உங்கள் உபதேசத்தைக் கேட்கிறவர்களும் எப்படி நடந்து கொள்கிறீர்களோ அதைப் பொறுத்துத் தான் இருக்கும். கர்த்தர் தம்முடைய பணியைச் செய்கிறார். மற்றவர்களும் கணிசமான அளவு கை தாங்குகிறார்கள். மீதம் உங்கள் கையில்.

**J. C. சோட்**

# ஜெபத்தின் அவசியம்

ஒரு கிறிஸ்தவனுக்கு ஜெபத்தைவிட வேறு முக்கியமான அலுவலோ கடமையோ இருப்பதாகச் சொல்ல முடியாது. தேவனுக்கு நாம் கீழ்ப்படிவதில் ஜெபத்துக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. ஆவியின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது ஜெபமாகும். கிறிஸ்தவ ஆராதனையில் ஜெபத்திற்கு தனி இடம் உண்டு. ஆதி சபையானது ஜெபத்தின் பின்னணியில் இயங்கிற்று எனவே புதிய ஏற்பாட்டு சபையின் எளிமை, வல்லமை, பரிசுத்தம் இவற்றை மீண்டுமாக இன்று செயல்படுத்தி கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கிற நாம் ஜெப வாழ்க்கையில் தரித்திருக்க வேண்டும்,

நமது ஜெப வாழ்க்கை வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டு அதை பின்பற்றுவதாக இருக்க வேண்டும். மத சம்பந்தப்பட்ட சகலவற்றுக்கும் வேதாகமம்மட்டுமே நமக்குஒரே சட்ட நூலாக இருப்பதால் அதுவே சரியான முறையில் ஜெபம் செய்ய நமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. பிரிவினை சபை நண்பர்கள் சிலர், குறிப்பாக ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்தவர்கள், ஜெபத்தை பரிசுத்தமான, உயர்ந்த செயலாகக் கருதுகின்றனர். ஜெபத்திற்கு அவர்கள் அளிக்கும் முக்கியத்துவத்தையும், அடிக்கடி ஜெபம் செய்யும் பழக்கத்தையும் நாம் பாராட்ட வேண்டும். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக, அவர்கள் செய்யும் ஜெபங்கள் பெரும்பாலும் வேதாகம அடிப்படையில் அமைவதில்லை.

புனிதர்களிடம் விண்ணப்பம் செய்வதும், மரியாளுக்கு மட்டுமே அதி முக்கியத்துவம் கொடுத்து, ஜெபமாலை, (அச்சிட்ட) தயாரிக்கப்பட்ட ஜெபங்களை செய்வதும் ரோமன் கத்தோலிக்க பிரிவினர் தவறான முறையில் செய்யும் ஜெபங்களுக்கு உதாரணமாகும். அவர்களின் உணர்ச்சி பூர்வமான எல்லா ஜெபங்களும் கிறிஸ்துவின் வழியாக தேவனிடம்ஏறெடுக்கப்பட்டால் அவை நல்ல பலனளிப்பவையாக இருக்குமே! ஆகவே வேதாகம அடிப்படையில் நமது ஜெபங்கள் யாவும் அமைய வேண்டியதன் அவசியத்தை நாம் உணர வேண்டும்.

நமது ஜெபங்கள் அர்த்தமுள்ளவைகளாக அமைய சில அடிப்படை கொள்கைகளை நாம் கடை பிடிக்கத் வேண்டும்.

1. **தேவன் இருக்கிறார்** : தேவன் ஒருவர் இல்லையெனில், நாம் செய்யும் ஜெபங்களுக்கு அர்த்தம் எதுவும் இருக்காது; அவை வெறும் சுய விமர்சனங்களாகவே இருக்கும். நமக்கு மேலான சக்தியிடம் உறவாடுவதே ஜெபமாகும்.

**2. தேவன் மனிதனுக்குத் தேவையானவர் :** தேவனுக்கு மனிதனுடைய உதவி எதுவும் தேவையில்லை. ஆனால் மனிதனுக்கோ தேவன் தேவையானவர். எனவே தான் அவரை நோக்கி ஜெபிக்கிறோம். நமக்கு மேலானவர், நம்மை படைத்தவர் என்ற உணர்வே ஜெபத்தால் அவரோடு நம்மை உறவாடச் செய்கிறது.

**3. தேவன் ஜெபங்களைக் கேட்கிறார் :** தேவன் நமது ஜெபங்களைக் கேட்கிறவராக இருக்கிறார். கோடிக்கணக்கான மக்களின் ஜெபங்களை ஒரே சமயத்தில் கேட்கும் வல்லமை படைத்தவராக அவர் இருக்கிறார். இவ்வுலகின் சகல கூச்சல், குழப்பங்களின் இடையிலும் தேவனை நோக்கி அழுது விண்ணப்பிக்கும் ஒரு ஆத்துமாவின் குரலைத் தெளிவாகக் கேட்கும் வல்லமை படைத்தவராக இருக்கிறார், நம் தேவன்.

**4. தேவன் ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார் :** நமது ஜெபங்களை தேவன் கேட்பது மட்டுமல்ல, அவற்றிற்குப் பதிலும் அளிக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். சக்தியற்ற, உயிரற்ற ஒரு கடவுளிடம் நாம் ஜெபத் தொடர்பு கொளள-வில்லை. மாறாக, நமது தேவன் ஜீவனுள்ள வல்லமையுள்ள தேவன். நாம் கேட்பதற்கு எதிராகவோ மாறாகவோ அவருடைய பதில் இருக்கக்கூடும் என்றாலும் நமது ஜெபங்களுக்கு அவர் பதிலளிக்கிறார் என்பது உண்மை.

**5. தேவன் மனிதனை நேசிக்கிறார் :** நமது ஜெபங்களைக் கேட்கும் தேவன் நம்மை நேசிக்கிறவராக இருக்கிறார். நமது தேவைகளை உணர்ந்தவராயிருக்கிறார். **''உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்''** *சங் 84:11*

தேவனின் பிள்ளைக்கு ஜெபம் செய்வது ஒரு தொடர் பழக்கமாக இருத்தல் வேண்டும். அப். பவுல் கூறினார். **''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்''** *1 தெசலோ 5:17;* கொலோ 4:2, **''ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்''** *ரோமர் 12:12.*

இயேசு கிறிஸ்து, **''சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் என்பதைக் குறித்து ஒரு உவமையைச் சொன்னார்''** *—லூக் 18:1.*

அன்றாட வாழ்க்கையில், தொடர்ந்து விட்டுவிடாமல் ஜெபம் செய்யவேண்டிய பழக்கத்தை வழக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய கடமை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண்டு.

**எஸ்.எஸ். ராஜன்** **ஸ்டீவ் வில்லியம்ஸ்**

# நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா?

கிறிஸ்துவுக்குள் இருக்கும் அனைவருக்கும் அளவற்ற ஆசீர்வாதங்களை அவர் அள்ளித்தருகிறார். அவருள் நீங்களும் இருந்தால் உங்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களை ருசித்துப் பார்க்க முடியும்.

1. ''அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது'', (கொலோ 1:14).
2. ''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின'' (2 கொரி 5 : 17)
3. ''கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்ளும்படி . . '' (2 தீமோ 2:10)
4. ''நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள்'' (கலா 3 : 26)
5. ''அவருக்குள் (கிறிஸ்து) ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது'' (கொலோ 2 : 3)
6. ''அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே 1 : 3)
7. ''கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்'' (எபே 1 : 3)
8. உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்'' (எபே 1 : 13)

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் மேற்சொன்ன அற்புதமான ஆசிர்வாதங்கள் எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும்.

**கிறிஸ்துவுககுள் இருக்க நாம் செய்ய வேண்டியதென்ன?**

**விசுவாசம் வேண்டும் :** ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்'' (எபி 11 : 6)

**மனந்திரும்ப வேண்டும் :** மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லோருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப் 17 : 30)

**வாயினால் அறிக்கையிட வேண்டும் :** கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்'' (ரோமர் 10 : 9)

**ஞானஸ்நானம் பெற்றுக்கொள் :** ''உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. (கலா 3 : 27)

**மேலே குறிப்பிட்ட எல்லா வேதவசனங்களும் நமக்குத் தெளிவுபடுத்துவது என்ன?**

1. கிறிஸ்துவுக்குள்ளே இரட்சிப்பு கிடைக்கிறது. (2 தீமோ 2:10)
2. ஆனால் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறவேண்டும் (கலா 3 : 27)
3. ஆகவே கிறிஸ்துவில் இரட்சிப்படைய ஒருவன் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியம்.

இரட்சிப்பின் இந்தத்திட்டத்தை மறுத்துக்கூற எவராலும் இயலுமா?

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? இயேசுவின் கட்டளைகளுக்கு விசுவாசத்துடன் உங்களை அர்ப்பணித்துக்கொண்டால் மேலே காணப்படும் சகல ஆசீர்வாதங்களையும் நீங்கள் பெறுவது உறுதி. ஏனென்றால் அவர் வாக்கு மாறாத தேவன்.

**ஜான் வேடி** S.S.R.

## உபவாசம் தேவையா?

தற்காலக் கிறிஸ்தவர்கள், விருந்து போதும்; விரதம் வேண்டாம், என்றும், கமிட்டிபோதும்; கதறல் வேண்டாம் என்றும் நினைக்கின்றனர். ஆனால் உபவாசமானது நமது ஆன்மீகக் கூறுகளைக் கூர்மையாக்கி தேவ சத்தத்தைத் தெளிவாகக் கேட்க வழி வகுக்கிறது. உபவாசமே தேவ ஆசீர்வாதத்தை நமக்கு பெற்றுத் தருவதில்லை; அது நாம் தேவாசீர்வாதம் பெற நம்முடைய மனதைப் பக்குவப்படுத்துகிறது. கொடுக்கா விட்டால் விடமாட்டோம் என்பதை அது தேவனுக்குத் தெரிவிக்கிறது.

# ஜெபத்தின் அவசியம்

ஒரு கிறிஸ்தவனுக்கு ஜெபத்தைவிட வேறு முக்கியமான அலுவலோ கடமையோ இருப்பதாகச் சொல்ல முடியாது. தேவனுக்கு நாம் கீழ்ப்படிவதில் ஜெபத்துக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. ஆவியின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது ஜெபமாகும். கிறிஸ்தவ ஆராதனையில் ஜெபத்திற்கு தனி இடம் உண்டு. ஆதி சபையானது ஜெபத்தின் பின்னணியில் இயங்கிற்று. எனவே புதிய ஏற்பாட்டு சபையின் எளிமை, வல்லமை, பரிசுத்தம் இவற்றை மீண்டுமாக இன்று செயல்படுத்தி கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கிற நாம் ஜெப வாழ்க்கையில் தரித்திருக்க வேண்டும்,

நமது ஜெப வாழ்க்கை வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டு அதை பின்பற்றுவதாக இருக்க வேண்டும். மத சம்பந்தப்பட்ட சகலவற்றுக்கும் வேதாகமம்மட்டுமே நமக்குஒரே சட்டநூலாக இருப்பதால் அதுவே சரியான முறையில் ஜெபம் செய்ய நமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. பிரிவினை சபை நண்பர்கள் சிலர், குறிப்பாக ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்தவர்கள், ஜெபத்தை பரிசுத்தமான, உயர்ந்த செயலாகக் கருதுகின்றனர். ஜெபத்திற்கு அவர்கள் அளிக்கும் முக்கியத்துவத்தையும், அடிக்கடி ஜெபம் செய்யும் பழக்கத்தையும் நாம் பாராட்ட வேண்டும். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக, அவர்கள் செய்யும் ஜெபங்கள் பெரும்பாலும் வேதாகம அடிப்படையில் அமைவதில்லை.

புனிதர்களிடம் விண்ணப்பம் செய்வதும், மரியாளுக்கு மட்டுமே அதி முக்கியத்துவம் கொடுத்து, ஜெபமாலை, (அச்சிட்ட) தயாரிக்கப்பட்ட ஜெபங்களை செய்வதும் ரோமன் கத்தோலிக்க பிரிவினர் தவறுன முறையில் செய்யும் ஜெபங்களுக்கு உதாரணமாகும். அவர்களின் உணர்ச்சி பூர்வமான எல்லா ஜெபங்களும் கிறிஸ்துவின் வழியாக தேவனிடம்ஏறெடுக்கப்பட்டால் அவை நல்ல பலனளிப்பவையாக இருக்குமே! ஆகவே வேதாகம அடிப்படையில் நமது ஜெபங்கள் யாவும் அமைய வேண்டியதன் அவசியத்தை நாம் உணர வேண்டும்.

நமது ஜெபங்கள் அர்த்தமுள்ளவைகளாக அமைய சில அடிப்படை கொள்கைகளை நாம் கடை பிடிக்கத் வேண்டும்.

**1. தேவன் இருக்கிறார் :** தேவன் ஒருவர் இல்லையெனில், நாம் செய்யும் ஜெபங்களுக்கு அர்த்தம் எதுவும் இருக்காது; அவை வெறும் சுய விமர்சனங்களாகவே இருக்கும். நமக்கு மேலான சக்தியிடம் உறவாடுவதே ஜெபமாகும்.

**2. தேவன் மனிதனுக்குத் தேவையானவர்** : தேவனுக்கு மனிதனுடைய உதவி எதுவும் தேவையில்லை. ஆனால் மனிதனுக்கோ தேவன் தேவையானவர். எனவே தான் அவரை நோக்கி ஜெபிக்கிறோம். நமக்கு மேலானவர், நம்மை படைத்தவர் என்ற உணர்வே ஜெபத்தால் அவரோடு நம்மை உறவாடச் செய்கிறது.

**3. தேவன் ஜெபங்களைக் கேட்கிறார்** : தேவன் நமது ஜெபங்களைக் கேட்கிறவராக இருக்கிறார். கோடிக்கணக்கான மக்களின் ஜெபங்களை ஒரே சமயத்தில் கேட்கும் வல்லமை படைத்தவராக அவர் இருக்கிறார் இவ்வுலகின் சகல கூச்சல், குழப்பங்களின் இடையிலும் தேவனை நோக்கி அழுது விண்ணப்பிக்கும் ஒரு ஆத்துமாவின் குரலைத் தெளிவாகக் கேட்கும் வல்லமை படைத்தவராக இருக்கிறார், நம் தேவன்.

**4. தேவன் ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார்** : நமது ஜெபங்களை தேவன் கேட்பது மட்டுமல்ல, அவற்றிற்குப் பதிலும் அளிக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். சக்தியற்ற, உயிரற்ற ஒரு கடவுளிடம் நாம் ஜெபத் தொடர்பு கொள்ளவில்லை. மாறாக, நமது தேவன் ஜீவனுள்ள வல்லமையுள்ள தேவன், நாம் கேட்பதற்கு எதிராகவோ மாறாகவோ அவருடைய பதில் இருக்கக்கூடும் என்றாலும் நமது ஜெபங்களுக்கு அவர் பதிலளிக்கிறார் என்பது உண்மை.

**5. தேவன் மனிதனை நேசிக்கிறார்** : நமது ஜெபங்களைக் கேட்கும் தேவன் நம்மை நேசிக்கிறவராக இருக்கிறார். நமது தேவைகளை உணர்ந்தவராயிருக்கிறார். **''உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்''** *சங் 84:11*

தேவனின் பிள்ளைக்கு ஜெபம் செய்வது ஒரு தொடர் பழக்கமாக இருத்தல் வேண்டும். அப். பவுல் கூறினார். **''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்''** *1 தெசலோ 5:17*; கொலோ *4:2*, **''ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்''** *ரோமர் 12:12*.

இயேசு கிறிஸ்து, **''சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் என்பதைக் குறித்து ஒரு உவமையைச் சொன்னார்''** —லூக் *18:1*.

அன்றாட வாழ்க்கையில், தொடர்ந்து விட்டுவிடாமல் ஜெபம் செய்யவேண்டிய பழக்கத்தை வழக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய கடமை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண்டு.

**எஸ்.எஸ். ராஜன்** **ஸ்டீவ் வில்லியம்ஸ்**

# நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா?

கிறிஸ்துவுக்குள் இருக்கும் அனைவருக்கும் அளவற்ற ஆசீர்வாதங்களை அவர் அள்ளித்தருகிறார். அவருள் நீங்களும் இருந்தால் உங்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களை ருசித்துப் பார்க்க முடியும்.

1. ''அவருக்குள், அவருடைய இரத்தத்தினுலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது''. (கொலோ 1:14).
2. ''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறன் பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின'' (2 கொரி 5 : 17)
3. ''கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்கிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்ளும்படி . . '' (2 தீமோ 2:10)
4. ''நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினுல் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்கள்'' (கலா 3 : 26)
5. ''அவருக்குள் (கிறிஸ்து) ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது'' (கொலோ 2 : 3)
6. ''அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே 1 : 3)
7. ''கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்'' (எபோ 1 : 3)
8. உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்'' (எபே 1 : 13)

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் மேற்சொன்ன அற்புதமான ஆசிர்வாதங்கள் எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும்.

**கிறிஸ்துவுககுள் இருக்க நாம் செய்ய வேண்டியதென்ன?**

**விசுவாசம் வேண்டும் :** ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றுல் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்'' (எபி 11 : 6)

**மனந்திரும்ப வேண்டும் :** மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லோருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப் 17 : 30)

**வாயினால் அறிக்கையிட வேண்டும் :** கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்'' (ரோமர் 10 : 9)

**ஞானஸ்நானம் பெற்றுக்கொள் :** ''உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. (கலா 3 : 27)

**மேலே குறிப்பிட்ட எல்லா வேதவசனங்களும் நமக்குத் தெளிவுபடுத்துவது என்ன?**

1. கிறிஸ்துவுக்குள்ளே இரட்சிப்பு கிடைக்கிறது. (2 தீமோ 2:10)
2. ஆனால் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறவேண்டும் (கலா 3 : 27)
3. ஆகவே கிறிஸ்துவில் இரட்சிப்படைய ஒருவன் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியம்.

இரட்சிப்பின் இந்தத்திட்டத்தை மறுத்துக்கூற எவராலும் இயலுமா?

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? இயேசுவின் கட்டளைகளுக்கு விசுவாசத்துடன் உங்களை அர்ப்பணித்துக்கொண்டால் மேலே காணப்படும் சகல ஆசீர்வாதங்களையும் நீங்கள் பெறுவது உறுதி. ஏனென்றால் அவர் வாக்கு மாறாத தேவன்.

**ஜான் வேடி** S.S.R.

## உபவாசம் தேவையா?

தற்காலக் கிறிஸ்தவர்கள், விருந்து போதும்; விரதம் வேண்டாம், என்றும், கமிட்டிபோதும்; கதறல் வேண்டாம் என்றும் நினைக்கின்றனர். ஆனால் உபவாசமானது நமது ஆன்மீகக் கூறுகளைக் கூர்மையாக்கி தேவ சத்தத்தைத் தெளிவாகக் கேட்க வழி வகுக்கிறது. உபவாசமே தேவ ஆசீர்வாதத்தை நமக்கு பெற்றுத் தருவதில்லை; அது நாம் தேவாசீர்வாதம் பெற நம்முடைய மனதைப் பக்குவப்படுத்துகிறது. கொடுக்கா விட்டால் விடமாட்டோம் என்பதை அது தேவனுக்குத் தெரிவிக்கிறது.

# "ஐயா இது இந்த வருஷமும் இருக்கட்டும்"

## லூக் 13 : 8

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே,

ஆண்டவர் இயேசுவின் இனிய பெயரால் வாழ்த்துக்கள். தேவ கிருபையால் ஒரு புதிய ஆண்டில் அடி எடுத்து வைத்திருக்கிறோம் நமக்கு நேரிட்ட நோய்கள், விபத்துக்கள், உபத்திரவங்கள். நிந்தைகளில் நம்மை கைவிடாமல் காத்த தேவனை துதிப்போம் இன்று நாம் நலமுடன் ஆயுளுடன் இருப்பது நமது பலத்தாலும் திறமையாலுமல்ல, தேவ கிருபையாலேயே என்று அறிந்து அவரைப் போற்றுவோம்.

வருடத்தின் துவக்கத்தை மக்கள் மகிழ்ச்சியுடன் துவங்குகின்றனர். புதிய தீர்மானங்கள், புதிய உடைகள், புதிய அலங்காரம், சிறப்பு உணவு வகைகள் வாடிக்கையானவைகளே. ஆனால் காலத்தின் அருமையையும் கர்த்தரில் நமது நிலையும் உணரப் படாமல்இருப்பது எத்துணை வேதனை! தனக்கு வெளியே புதிய சூழலை உருவாக்கும் மனிதன், தான் மட்டும் பழையவனாகவே இருக்கிறானே! தனக்கு வெளியே மாற்றங்களை செய்யும் மனிதன், தன் உள்ளத்தில் மாறாதவனாவே இருக்கின்றானே! இது தான் புது வருட போலி கலாச்சாரகமோ?

தேவன் நம்மை எந்த நோக்கத்திற்காக படைத்தார்? அதை நிறைவேற்றி இருக்கிறோமா? தேவசித்தம் நம்மை ஆளுகிறதா? நமக்கு அருமையாய்க் கொடுக்கப்பட்ட கடந்த காலத்தை எப்படி பயன்படுத்தினோம்! உண்ணவும், உடுக்கவும், உறங்கவும், மனமகிழவும் மட்டுமே நமது பொன்னான காலத்தை கழித்தோமே! கர்த்தருக்காக, அவருடைய சபைக்காக என்ன செய்திருக்கிறோம்? இன்று நாம் நிர்மூலமாகாமலிருப்பது தேவனுடைய சுத்த கிருபையல்லவா? கடந்த ஆண்டில் மரிந்துபோன ஆயிரமாயிரம் மக்களை விட நாம் சிறந்தவர்கள் என்பதாலா இன்று உயிர் வாழ்கிறோம்?

கனிகொடாதிருந்த நாம், திராட்சை தோட்டத்தை கெடுத்துக் கொண்டிருந்த, — பூமிக்கு பாரம் என மற்றவர்களால் வையப்பட்ட நாம் வெட்டி சாய்க்கப்படாமல் இருக்கும்படி "ஐயா இது இந்த வருடமும் இருக்கட்டும்" என்று நமக்காக மன்றாடி ஓராண்டு தவணைக் காலம் வாங்கி தந்திருக்கிறார் என்பதை

அறிந்துணர்வோம். ஒரு நாள் பிறப்பதை அறியோமே, காலங்கள் கர்த்தருடைய கரத்திலல்லவா இருக்கிறது. (சங் 31:5, நீதி 27:1)

இந்த தவணையின் காலத்தை கருத்துடன் செலவிடுவோமா? இக்காலத்தில் நாம் மவுனமாய் இராமல் தேவசித்தம் செய்வோமா! இதோ அவ்விதம் செய்ய நம்மை தூண்டி எச்சரிக்கும் கர்த்தருடைய வார்த்தைகளில் சில,

**1. நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள்** (எபே 5;16)

**மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராவும்....தேவ பக்தியின் வேஷத்தை தரித்துக் கொண்டு அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; அப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு** (2 தீமோ 3:1-5)

**3. பகற்காலம் இருக்குமட்டும் என்னை அனுப்பினவருடைய கிரியைகள் செய்ய வேண்டும், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது** என்ற கர்த்தருடைய வார்த்தையை சிந்திப்போம் (யோவா 9:4).

**4. நாளைக்கு நடப்பதை நாம் அறியோம். நமது நாட்கள் குறுகினதாய் இருக்கிறபடியால் அருளுள்ள நாட்களில் செயல்படுவோம். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலம் தோன்றி பின் தோன்றாமல் போகிற புகையைப் போல் இருக்கிறதே** (யாக் 4: 13-15 காண்க). **மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாய் இருக்கிறது வெளியின் புஷ்பத்தை போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமல் போயிற்று. அது இருந்த இடமும் அது இனி அறியாது** சங் 103:15-16)

ஆகவே இந்த கிருபையின் ஆண்டை கர்த்தருக்கு பிரியமாய் செலவிட்டு வாழ்வோமாக! இதோ அதற்கான சில ஆலோசனைகள்,

முதலாவதாக, இந்த ஆண்டை நமது கடைசி தவணை காலமாக எண்ணிச் செயல்படுவோம். ''மேலும் சகோதரரே நான் சொல்லுகிறது என்னவெனில் இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும், அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும், சந்தோசப்படுகிற-

வர்கள் சந்தோச படாதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும், இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதை தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்க வேண்டும். இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே''
*(1 கொரி 7:29-31)*

நோவாவின் நாட்களின் தவணைக் காலத்தை அசட்டை செய்தவர்கள் அழிந்து மாண்டனர். தியத்தீரா சபையில் மனந்திருந்தாதவர்களுக்கு கர்த்தர் தவணைக் காலமும் எச்சரிப்பும் கொடுத்தார் (வெளி *3 : 21-23*). இஸ்ரவேலரை போல ''கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்று சொல்லாதிருப்போமாக (ஆகா 1:2) வலிமையான சபைகளைக் கட்டவும், ஆத்தும ஆதாயம் செய்யவும், சுய ஆயத்தம் செய்யவும் இதுவே கடைசி ஆண்டு என்ற மனநிலையில் செயல்பட்டால், அதிகம் சாதிக்கிறவர்களாய் இருப்போம்.

**இரண்டாவதாக** கர்த்தரில் நிலைத்திருந்து கனி கொடுப்போம். நற்கனி தரும் திராட்சைக் கொடியாய் நாட்டப்பட்டிருந்தும், காட்டுத் திராட்சையின் ஆகாத கொடிகளாய் இருந்தமைக்காக வருந்துவோம் (எரே *2;21*) நல்ல திராட்சை பழங்கள் எதிர் பார்க்கப்பட்ட வேளையில் கசந்த கனிகள் கொடுத்ததை நினைத்து வருந்துவோம் (ஏசாயா *5:17*) பசுமையான இலைகளுடன் செழிப்பாக காட்சி தந்த அந்த அந்திமரத்தில் ஆண்டவர் கனியைத் தேடினார். கனிதரும் மரமாக போலி - தோற்றமலித்த அந்த மரம் வேரோடே பட்டுபோகும்படி சபிக்கப்பட்டது (மத் *21:10*) சகோதரனே சகோதரியே, ஒரு வேளை நீ புதிய தீர்மானங்கள், உறுதி மொழிகள், வாழ்த்துப் பரிமாற்றங்கள். புத்தாடை சகிதம் போலித் தோற்றமளிக்கிறாயா? நீ உன்னை மகிழ்வித்துக் கொள்ளலாம். ஆனால் ஆண்டவரை ஏமாற்ற முடியாது அவர் போலித்தனத்தையல்ல, ஆவிக்குரிய கனிகளையே உன்னில் தேடுகிறார். (அப் *26:20*) என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்து போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிளை கொடுக்கும்படி அதை சுத்தம் பண்ணுகிறார். கர்த்தரில், அவருடைய சித்தத்தில், சேவையில், உபதேசத்தில் நிலைத்திருப்பதே கனிதரும் வாழ்க்கையின் இரகசியமாயிருக்கிறது (யோவா *15:18*).

**மூன்றாவதாக,** காரியங்களை ஒத்திபோடும்' பழக்கத்தை கைவிட்டு, உடனடி செயலில் இறங்குவோம்.

உடனே தீர்மானம் செய்யத்தவறினாலும், காரியங்களை ஒத்திப் போட்டதாலும் அநேகர் இரட்சிப்பை பெறாமலேயே

*மரித்து போயுள்ளனர் பல நல்ல வேலைகள் செய்யப்படாமலேயே நின்று விட்டன.* **இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம். இப்பொழுதே இரட்சண்ய நாள்** *(2 கொரி 6:2).* **சமயம வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணு** *(2 தீமோ 4:2). தூய சத்தியத்தை அறிந்தும் கீழ்படியாதோரே! போலி சபை வாழ்க்கையில் வெறுப்புற்றோரே! கர்த்தரின் வார்த்தை கேளீர்!* **அறுப்பு காலம் சென்றது கோடை, காலமும் முடிந்தது நாமோ இரட்சிக்கப்படஇல்லை பின் ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?** *(எரே 8:20-22 89-ஆம் ஆண்டு சென்றது, 90ம் முடிந்து விட்டது. 91ம் பிறந்து விட்டது. பின் ஏன் இன்னும் இரட்சிக்கப்படாமல் இருக்கிறாய்? இரட்சகர் இல்லையா? சுவிசேஷம் இல்லையா? சுவிசேஷகர் இல்லையா? உன் மனமின்மையும் ஒத்திபோடும் பழக்கங்களும் தானே காரணம். இதை வாசிக்கும் அருமையான வாசகரே,* **இன்றே** *மனந்திரும்பி குணப்படுவீர் பின் வாங்கிப்போன விசுவாசியே, இன்றே ஆதி அன்புக்குத் திரும்புவீர்! உங்களுக்கு கிடைத்த* **இந்நாளிலாவது உங்கள் சமாதானத்திற்க் கேற்றவைகளை செய்யுங்கள்** *(லூக் 19:42)*

*கர்த்தருக்குள் பிரியமான அவருடைய பணியாளரே! ஒரு வேளை கர்த்தருக்கு உழைத்தும் பலன் கிட்டவில்லை, அவர் என்னை இன்னும் உயர்த்தவில்லை என்று வருந்துகிறீரா?* **நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றவேளையில் அறுப்போம்.** *(கலா 6;10)* **ஆதலால் ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கரத்துக்குள் அடக்கியிருங்கள்** *(1பேது 5:6)*

*என் பிதாவின் திராட்சை தோட்டத்தில் நான் எப்படிப்பட்டவனாக இருக்கிறேன்? என் ஆண்டவரோடு இணைந்திருக்கிறேனா? கிறிஸ்தவனாக, ஊழியன் என்ற இலைப்போர்வையில் கனியற்று காணப்படுகிறனோ? சபையை கெடுத்துக்கொண்டிருக்கிறேனா? அல்லது சபை என்னால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறதா? இக்கேள்விகளை நல்மனதோடு கேட்டு நேர்மையாய் பதிலளிப்போம்.*

*காலத்தை ஆதாயப்படுத்துவோம் கனி தருவோம் வருகைக்கு ஆதாயப்படுத்துவோம்.*

*''ஐயா,* **இது இந்த வருடமும் இருக்கட்டும்.**

*கர்த்தர் இந்த ஆண்டில் உங்களை ஆசீர்வதிப்பாராக.*

**P. பால்ராஜ்** *14, திருநகர், கருமண்டலம், திருச்சி-1*

# இரட்சிப்பில் தேவனுடைய பங்கும் மனிதனுடைய பங்கும்

கிறிஸ்தவ மார்க்கத்தில் எந்த ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்கும் என்பது வேதனையான உண்மை. இரட்சிப்பு என்ற பொருளும் அதற்கு விதி விலக்கல்ல. இந்த முரண்பாடுகளுக்கு வேதாகமம் பொறுப்பல்ல. மனிதனுடைய சிறுமதியும், தான் ஏற்கனவே கொண்டிருக்கிற கருத்துச்குப் பொருந்தி வருகிற வசனங்களை மட்டும் தேடிப் பிடித்து வைத்துக்கொண்டு, அதே பொருளைப் கூறுகிற மற்ற வசனப் பகுதிகளைப் புறக்கணித்து ஒதுக்கி ஓரம் கட்டி விடுவது தான் காரணம்.

எந்த ஒரு கருத்தைப் பற்றியும் சரியான முடிவுக்கு வர வேண்டுமானால் அதைப்பற்றிச் சொல்லப்பட்ட எல்லா வசனங்களையும் படித்து அவைகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்டிருக்கிறது என்று ஆய்வு செய்து முடிவுக்கு வர வேண்டும். இல்லாவிட்டால் குருடர்கள் யானை பார்த்த கதை போல கருத்து வேற்றுமைகள் இருந்து கொண்டு தான் இருக்கும். இரட்சிப்பு போன்ற முக்கியமான காரியங்கள் நம் நித்தியம் சம்பந்தப்பட்ட விஷயம். இதைக் குறித்து இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பது அபாயம். ஆகவே அதைப் பற்றி வேத வசனங்களின் வெளிச்சத்தில் தெளிவு பெற முயற்சிப்போம்

''கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு''

''ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல'', எபே 2:8,9,) என்கிற வசனத்தையும், ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' என்கிற வசனத்தையும் ஆதாரமாகக் காட்டி இரட்சிப்பு தேவனுடைய சுத்த கிருபை அதில் மனிதன் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்று போதிக்கின்றனர்.

வேறு சிலர், ''நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்''.

''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' மாற்கு 16:15,16) என்கிற வசனத்தையும் ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப் 2:38) என்கிற வசனத்தையும் சுட்டிக் காட்டி இரட்சிப்பின் திட்டத்தில் மனிதனுக்கும் பங்கு உண்டு என்று வற்புறுத்துவர்.

இருசாரார் கூற்றிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் முழு உண்மை அல்ல. ஒருவர் இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபை மட்டும் போதும் என்கிறார். மற்றவர் மனுஷருடைய கிரியை முக்கியம் என்கிறார். வேதாகமத்தை ஆய்ந்து பார்க்கின், இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபையும் வேண்டும்; மனுஷனுடைய கிரியையும் வேண்டும் என்பது புலனாகும். மாற்கு 16:15,16 மற்றும் அப் 2:38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் தேவ கிருபை மட்டும் இரட்சிப்புக்குப் போதும் என்று போதிப்பதும், அதை ஏற்றுக் கொள்வதும் தவறானது. அதே போல சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதே இரட்சிப்புக்குப் போதுமானது என்பதும் அபத்தம்.

கிறிஸ்து, இரட்சிப்புக்குப் பல வழிகள் உண்டு என்று போதிக்கவில்லை. ''என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது'' என்கிறார் (யோவான் 7:16) அந்த உபதேசத்தில் மாற்றம் ஏற்படக் கூடாது என்று கருதி, அதைத் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரிடத்தில் ஒப்புவித்து, அவைகளின்படி அப்போஸ்தலர்களை வழி நடத்தவும், மறந்து போனதை நினைவுக்குக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்தார். (யோவான் 14:26;16:13) அப்படிப்பட்ட தெளிவான முறையில் உபதேசத்தைக் கற்றுக் கொண்ட அப்போஸ்தலர்கள் இரட்சிப்பைக் குறித்து எபேசு பட்டணத்தில் ஒரு மாதிரியும், கொரிந்து பட்டணத்துக்குப் போய் அங்கு ஒருவிதமாகவும் போதிப்பார்களா? வேதாகமத்தில் தொகுத்து அளிக்கப்பட்டிருக்கும் இரட்சிக்கப்பட்ட சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நீங்கள் கவனமாக வாசித்துப் பார்த்தால் அவைகள் எபே 2:8-9க்கும்; மாற்கு 16:15,16 மற்றும் அப் 2:38க்கும் ஏற்ற வகையில் தான் நடைபெற்றிருக்கிறது என்று அறியலாம். இயேசு கிறிஸ்து ஒரே வழி. அவருடைய போதனையும் ஒரே போதனைதான்.

இயேசு கிறிஸ்து தம்முடைய மரணத்துக்குச் சற்று முன்பாக அவரைப் பின்பற்றுகிற சீஷர்கள், எல்லாரும் ஒன்றாக இருக்க

வேண்டும் என்று உருக்கமாக ஜெபித்தார். (யோவான் 17:20,21) அப்படியானால் அவரைப் பின்பற்ற விரும்புகிற அனைத்து மக்களும் ஓரே வழியில் நடக்கவும், ஓரே விதமாக இரட்சிக்கப்படவும் வேண்டுவதும் கூட அவசியமன்றோ! ஆகவே இரட்சிக்கப்பட்பட ஒவ்வொரு சம்பவத்திலும் எபே 2:8-9 மற்றும் யோவான் 3:16 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற தேவ கிருபையும், மாற்கு 16:15,16 மற்றும் அப் 2:38 ஆகிய வசனங்களில் சொல் லப்பட்டுள்ள மனிதனுடைய பங்கும் சந்தேகத்துக்கு இடமின்றி இணைந்து இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் பார்த்துக் கொண்டார்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் எவ்வாறு தேவனுடைய அன்பு, அழிந்து போகிற மானிடருக்காகச் சுரந்தது என்றும், கர்த்தராகிய இயேசு அதை அறிந்து எப்படித் தன்னை அர்ப்பணித்துத் தியாகம் செய்தார் என்பதையும் கேட்டு, உள்ளத்தில் விசுவாசித்து ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து தேவனுடைய இராஜ்ஜியத்துக்குள் பிரவேசித்தார்கள் என்று விளக்குகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இரட்சிப்பின் திட்டத்தில் அனைத்து அம்சங்களும் இழை யோடுவதைக் கவனியுங்கள்.

பல சமயங்களில, நாம் மனிதனுடைய பங்கையே அதிகமாக வலியுறுத்திக் கொண்டு இரட்சிப்பில் தேவ கிருபையின் இன்றியமையாமையை மறந்து விடுகிறோம். விசுவாசத்தின் மூலமாக எப்படி ஒரு மனிதன் அந்தக் கிருபையைச் சந்தித்து மறுபடியும் பிறக்கிறான் என்று விளக்கத் தவறி விடுகிறோம். அதனால் மக்கள் தேவ கிருபையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் நிலைக்குத் கள்ளப்படுகிறார்கள். அது சரிஅன்று.

கிருபை என்பது என்ன? கிருபை என்பது நாம் சம்பாதிக்காத ஓர் சொத்து. அதைப் பெற்றுக் கொள்வதற்கு நமக்குத் தகுதி கிடையாது. அதற்கு ஈடாக நாம் ஒன்றும் தர வேண்டியதில்லை. அதைப் பெற்றுக் கொள்ள ஒரு தகுதியும் நிர்ணயிக்கப்படவும் இல்லை. அதை, ரோமத் திருச்சபைக்கு அப்போஸ்தலன் பவுல் கீழ்வருமாறு விளக்குகிறார், **"கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்று எண்ணப்படாமல் கடன் என்று எண்ணப்படும்.**

**ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால் அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.** (ரோமர் 4:4;6) ஆக, தேவ கிருபை என்பது, இரட்சிக்கப்படுவதற்கு எவ்விதத் தகுதியுமில்லாத ஒருவனை இரட்சிப்புக்குள்

கொண்டு வர தேவன் பாராட்டுகிற இரக்கம் என்று சொல்லலாம். ஒருவன் பாவ மன்னிப்புப் பெற்று இரட்சிப்புக்குள் வர நீதிமானாக இருக்க வேண்டும். ஆனால் எல்லாரும் பாவம் செய்து கெட்டுப் போய் விட்டபடியால் ஒருவருக்கும் அந்தத் தகுதி கிடையாது. பின்னர் ஒருவன் பாவ மன்னிப்பு அடைவது எங்ஙனம்? அதற்கு தேவனே ஒரு எளிமையான திட்டத்தை வகுத்துக் தந்துள்ளார் என புதிய ஏற்பாடு நமக்குப் போதிக்கிறது. அதாவது ஒரு பாவி, சிலுவை மரத்தில் தொங்கி மரித்த இயேசுவின் வழியாகவே தேவ அன்பையும், தேவனுடைய இரக்கத்தையும் தேவ கிருபையையும் பெற்று தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்க முடியுமே தவிர, தன்னுடைய நீதியின் கிரியைகளினிமித்தம் அது சாத்தியப் படாது ஏனெனில் **நம்முடைய நீதி என்பது அழுக்கடைந்த கந்தை** என்று ஏசாயா கூறுவதை (ஏசா 6:6-11) **'எல்லோரும் பாவம், செய்து தேவ மகிமையற்றவர்களாகி விட்டோம்** (ரோமர் 3: 23) **''நீதிமான் ஒருவனும் இல்லை** (ரோமர் 3:10) என்று கூறி பவுல் அப்போஸ்தலனும் அதை ஆமோதிக்கிறார். ஆகவே தேவனுடைய கிருபையில்லாமல் தன் சுய முயற்சியால் எந்த ஒரு மனுஷனும் தேவனுடைய சிம்மாசனத்துக்கு முன்பாக நீதிமானாக முடியாது.

விசுவாசத்துக்குக் கீழ்ப்படிகிற விஷயத்தில் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள மனிதன் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டியிருக்கும். என்பதைப்பற்றி இங்கே பேச்சில்லை. அப்படிப் பட்ட செயல்பாடுகள் அவனுடைய இரட்சிப்பை அவனுக்குச் சம்பாதித்துத் தருவதில்லை. அவைகள் தேவனுடைய கிருபையிலும், இயேசுகிறிஸ்துவின் மரணத்திலும் வைக்கும் விசுவாசத்தின் வெளிப்பாடே. அவைகள் அவனுடைய பாவமன்னிப்பை உள்ளடக்கிய தேவ கிருபையையும், இரக்கத்தையும் பெற்று தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்குவதற்கு அவனுக்கு தேவைப்படுகிற காரியங்களே அன்றி அவைகளே இரட்சிப்புக்குப் போதுமானவைகள் அல்ல.

உதாரணமாக, ஒரு தர்ம சிந்தையுள்ள செல்வந்தன் ஒரு அனாதை விடுதிக்கோ அல்லது ஒரு குருடர் பள்ளிக்கோ ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை இனாமாகக் கொடுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம், அப்பள்ளியின் நிர்வாகி வங்கிக்கு எடுத்துச் சென்று பணம் பெறுகிறார். காசோலையை வங்கிக்கு எடுத்துக் சென்று பணமாக மாற்றினதே அந்த தொகையை பெற்றுக் கொள்வதற்கு தகுதியாகி விடுமா? அதனால் இலட்சம் ரூபாய் இனாமாகக் கொடுத்தார் என்ற உண்மை மாறுவதில்லை, அதேபோல் அந்தக் காசோலையை வங்கிக்கு எடுத்துச் சென்று பணமாக மாற்றாதவரை அந்தக் காசோலையால் பயன் கிடையாது,

அதைப் போன்றுதான் இரட்சிக்கப்படுவதற்கு தேவ கிருபையும், கிறிஸ்துவினுடைய தியாகமும் அவசியம். அது இலவசம். ஆனால் அதைப் பெற்றுக் கொள்ள விசுவாசம் தேவை ''**விசுவாசத்தின் மூலம்**'' என்ற சொல்லாச்சிக்கு அதுவே பொருள்.

தேவனால் கொடுக்கப்படுகிற இலவசமான ஈவாகிய இரட்சிப்பை மனிதன் விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் எபே 2:8,9 கூறுகிற முழுமைக் கருத்து அப்படியில்லை என்று சொன்னால் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் என்று நேரடியாச் சொல்லியிருக்கலாமே ''விசுவாசத்தைக் கொண்டு'' என்ற சொற்றொடர் ஏன்?

ஆகவே இயேசு இரட்சிப்பின் திட்டத்தில் விசுவாசத்தின் வெளிப்பாடாகிய மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பற்றிச் சொல்லியிருக்கும் நிபந்தனைகளை நாம் குறைவாக மதிப்பிடவோ உதாசீனம் செய்வதோ கூடாது.

ஆனால் ஒன்றை நாம் எல்லாருமே ஒத்துக்கொள்ள வேண்டும். இயேசுவின் இரத்தமே இரட்சிப்பின் மையம். நாம் கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய இரத்தத்தின் வல்லமையைச் சார்ந்து நிற்கிறோம். கிறிஸ்துவே நம் பாவம் போக்கும் பரிகாரி. இரட்சிப்பின் திட்டத்தில் தேவ கிருபை சிலுவையின் வழியாக மனிதனிடத்திற்கு இறங்கி வருகிறது. மனிதனுடைய விசுவாசம் அதே சிலுவை வழியாக தேவனிடத்துக்கு ஏறிப் போகிறது.

தேவனுக்கு முன்பாக நீதிமானாக விளங்குவதற்கு மனிதனுக்குள் எவ்விதமான தகுதியும் இல்லை. ஆகவே தன்னுடைய பாவங்களுக்காக தானே பாவ மன்னிப்புப் பெற முடியாது என்றும், அதைக் கர்த்தருடைய கிருபையே செய்யும் என்றும் புதிய ஏற்பாடு தெளிவாகப் போதிக்கிறது. ''கிருபையின் மூலமாக நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள்; இது தேவனுடைய ஈவு; ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானது அல்ல (எபே 2: 8,9) என்கிற வசனப்பகுதி நமக்குப் போதிக்கிற உண்மை என்ன? நம்முடைய இரட்சிப்புக்கு மனிதனுடைய கிரியைகளை விட தேவ கிருபையே பிரதானமானது. அந்த வல்லமை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் இருக்கிறது. நமக்குப் பாவமன்னிப்பு உண்டாவதற்கு இயேசு. கிறிஸ்துவின் இரத்தமே முழு முதற் காரணமாகிறது பாவப்பிணியால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் நம்மை விடுவிக்க வல்லவர் இயேசு கிறிஸ்துவே. நம்முடைய ஆவிக்குரிய நோயைத் தீர்க்க ஒரே ஒரு மருந்து இயேசுவின் இரத்தம் மட்டுமே,

ஆகவே இரட்சிப்பில் தேவனுடைய பங்கே பிரதானமானது. கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது தேவனுடைய

ஈவு; கிரியையினால் அல்ல ஒருவரும் பெருமை பாராட்டுவதற்கு இடம் இல்லை. எவ்வளவு அருமையான ஏற்பாடு! அவருடைய மகத்தான அன்புக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டாமா? இயேசுகிறிஸ்துவின் சிலுவை வழியாக தேவனுடைய இரக்கமும் கிருபையும் வெளிப்பட்டிருக்கிறதை நீங்கள் உணர முடிகிறதா?

இப்பொழுது இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு என்ன என்பதைப் பார்ப்போம். நாம் சிந்தித்த எபே 2.8,9ல் ஒரு பகுதி நாம் தேவனுடைய கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம் என்று மட்டும் சொல்லாமல் மனிதனுடைய விசுவாசத்தைக் கொண்டும் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று கூறுகிறது. வேதாகமம் இரட்சிப்பு தேவனுடைய ஈவு என்கிறது. அதற்கு இரட்சிப்பு நிபந்தனை அற்றது என்று பொருளா? இல்லை. நீங்கள் ஆம், இரட்சிப்பு நிபந்தனையற்றது என்று நான் நம்புகிறேன் என்று சொல்வீர்களானால் ''விசுவாசத்தைக் கொண்டு'' என்ற சொற்றொடருக்கு அங்கு வேலையில்லையே! கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது தேவனுடைய ஈவு என்பதெல்லம் எவ்வளவு அர்த்தமுள்ளவைகளோ, அதே அளவு 'விசுவாசத்தைக் கொண்டு' என்பதும் அர்த்தமுள்ளதே. ஈவைப்பூரணப்படுத்துகிறதற்கு இரண்டு காரியங்கள் தேவைப்படுகிறது. ஒருவர் கொடுக்க வேண்டும். . . மற்றொருவர் பெற்றுக் கொள்ள வேண்டும். பெறுவதற்கு அங்கே ஒருவர் இல்லையென்றால் ஈவு பூரணப்பட்டதாகக் கொள்ள முடியாது.

தேவன் தம்முடைய இரக்கத்தினால் இரட்சிப்பை மனிதனுக்கு ஈந்ததற்காக ஸ்தோத்திரம். ஆனால் மனிதன் விசுவாசத்தின் மூலம் அதைப் பெற்றுக் கொள்ளாதவரை அவன் அதை அடைய முடியாமல் இன்னும் இழந்து போன நிலைமையிலேயே இருப்பான். விசுவாசம் தான் நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள வகை செய்கிறது. இயேசு கிறிஸ்து, இரட்சிப்பின் நிபந்தனைகளில் மனிதனுடைய பங்கைப் பற்றி மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதைக் குறைவாக மதிப்பிட்டு தவறுத் செய்து விடாதபடி தேவன் காத்துக் கொள்வாராக!

'விசுவாசத்தைக் கொண்டு' என்ற சொற்றொடரில் பொதிந்து கிடக்கிற கருத்து என்ன? விசுவாசத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிற ஒரு கருத்தை மட்டும் எடுத்துக் கொண்டு மற்ற வசனப்பகுதிகளை-புறக்கணித்துப் போடுவதா? விசுவாசத்தைக் குறித்துச் சொல்லப்பட எல்லா வசனப்பகுதிளையும் படித்து ஒன்றோடொன்று எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவேண்

டும். இரட்சிப்பில் தேவனுடைய பங்கும், மனிதனுடைய பங்கும் சிலுவையை மையமாகக் கொண்டிருக்கிறது. சிலுவையல்லாமல் மனிதனுடைய பங்கு அர்த்தமற்றது. தேவனுடைய பங்கு கூட சிலுவையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது என்றாலும் கூட விசுவாசம், ஒப்புக் கொடுத்தல் என்பவைகளின் பொருளை சரியாக விளங்கிக் கொள்ளாமற் போனால், இழந்த பாவிக்கு அது பொருளற்றதே. ஒருவன் தன்னுடைய விசுவாசத்தைக் கீழ்ப்படிதலில் வெளிப்படுத்த வேண்டும். தேவனுடைய பங்கு என்பதற்கு (எபே 2:8,9ஐ பயன்படுத்தினோம் ஏனெனில் அது தேவனுடைய கிருபையையும், தேவனுடைய ஈவையும் குறித்துப் பேசுகிறது. அவ்வாறே மனிதனுடைய பங்கு என்பதற்கும் அதைப் பொருத்திப்பார்ப்போம். ஏனெனில் அது மனிதனுடைய விசுவாசத்தைக் குறித்தும் பேசுகிறது.

தேவன் நமது இரட்சிப்புக்கு எவ்வளவோ செய்திருந்த போதிலும், விசுவாசத்தினாலே நாம் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதனால் பயன் ஒன்றும் ஏற்படாது. முதலாவது நாம் இரட்சிப்பின் வேர் எது என்று கண்டு பிடித்து பின்னர் இரட்சிப்பின் கனியைத் தேட வேண்டும். இயேசுக் கிறிஸ்துவின் இரத்தமே இரட்சிப்புக்கு இன்றியமையாதது என்பது சரி. ஆனால் நம்மை நீதிமானாக்குவது நமது விசுவாசமே. இப்பொழுது நமக்குக் கருத்து வேற்றுமை எங்கே இருக்கிறது? யோவான் 3:16லும் மாற்கு 16 : 16 லும் உள்ள விசிவாசிக்கிறவன், என்ற வார்த்தையின் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் இந்த வார்த்தைக்கு **நம்பு, சார்ந்து கொள்** என்று பொருள் கொள்ளலாம். நாம் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். அதற்கு நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையைச் சார்ந்து நிற்கிறோம், பாவ நிவாரண பலியாகிய கிறிஸ்துவின் மேல் நாம் நம்பிக்கை வைக்கிறோம் என்று பொருள். **விசுவாசம் கேள்வியினாலே வரும் கேளவி தேவனுடைய வசனத்தினால் வருகிறது.** (ரோமர் 10:17) **விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாத நிச்சயமுமாயிருக்கிறது என்கிறார்** எபிரேய நிருப ஆசிரியர். (எபி 11:1)

விசுவாசம் என்பது செயலையும் சேர்த்துத்தான் குறிக்கிறது: செயல் இல்லாத விசுவாசத்தை வேதாகமம் ஆவியில்லாத சரீரம் என்று வாக்களிக்கிறது. யாக் 2:26

ரோம் 4: 3ல் ''**ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது இவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது**'' என்கிறது ஒரு குழந்தையை ஈன்றெடுப்பதற்குரிய சரீர பெலன் சாராளுக்கு அற்றுப்

போன பின்பு, சாராள் மூலமாக ஓர் ஆண் மகவைத் தருவேன் என்று சொன்ன போது மற்ற கட்டளைகளைப் போலவே இதுவும் அவனுக்குச் சோதனையாய் அமைந்தது. ஆனால் ஆபிரகாம் தன் விசுவாசத்தில் உறுதியாக இருந்து வாக்குத்தத்தம் நிறைவேறக்காத்திருந்தான். அவனுடைய விசுவாசம் உறுதியுள்ளதாகவும், உயிருள்ளதாகவும், தேவனுடைய எந்தக் கட்டளைக்கும் கீழ்ப்படியத் தயாராகவும் இருந்தது. பின்னர் ஒருகட்டத்தில் ஈசாக்கைப் பலியிட தேவன் கட்டளையிட்ட போது நாம் அவருடைய விசுவாசத்தின் கனியைக் காணமுடிகிறது. (எபி 11: 17-19) மரித்தோருக்கு ஜீவனைக் கொடுக்கிற தேவனிடத்தில் ஆபிரகாம் விசுவாசம் வைத்தான். அதனால் ஈசாக்கைப் பலியிடத் தயங்கவில்லை. அவனுடைய விசுவாசம் செயல்படாததாக இருந்தால் அது தேவனுக்கு பிரியமாய் இருந்திருக்காது.

''**விசுவாசத்தை கொண்டு**'' என்ற சொற்றொடரில் மனந்திரும்புதலும் அடக்கம். ''**அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசேலம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவேண்டியது**'' என்று இயேசு சொன்னார் (லூக் 24:47) சபை ஆரம்பிக்கப்பட்ட நாளில் தேவனுடைய கிருபையை எவ்வாறு அடைந்து பாவ மன்னிப்புப் பெறுவது என்று பேதுரு கூறினார், **பாவ மன்னிப்புகென்று, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்**'' *(அப் 2:38)*

மனந்திரும்புதல் என்பது ஒரு மனிதன் சிலுவையண்டை வந்து நின்று தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும் தேவ நீதியையும் நோக்கிப் பார்த்து கிறிஸ்து இயேசு அவனுக்காக மரித்தார் என்று உணர்வதாகும். ''**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்**'' *(2 கொரி 5:21)* மனிதன் இயேசுவின் இரத்தத்தின் மேன்மையையும், வல்லமையையும் உணராவிட்டால் மனந் திரும்ப மாட்டான். அவன் சிலுவையண்டையில் வந்து, இயேசுவின் கால்களிலும், கைகளிலும் அடிக்கப்பட்ட ஆணிகளின் சத்தத்தைக் கேட்டு, அவருடைய வேதனையின் பெருமூச்சின் உஷ்ணத்தால் மனமுருகி ஆண்டவரே! என் மேல் இரக்கமாயிரும் என்று கதறுவான். **விசுவாசத்தைக் கொண்டு** என்ற சொற்றொடரில் அறிக்கையிடுதலும் அடக்கம்.

**கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்**

**நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.** (ரோமர் 10 : 9-10)

பின்னர் **ஞானஸ்நானம் :** இப்பொழுதும் நம் கண் முன்னே சிலுவையை நிறுத்தி நோக்குகிறோம். நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம் ஆனால் 'விசுவாசத்தைக் கொண்டு' என்பதை மறந்து விடக்கூடாது. நம்முடைய கர்த்தரை விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கை செய்ய வேண்டும் என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், நம்முடைய மனதில் மறைந்து கிடக்கும் விசுவாசத்தை சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஞானஸ்நானத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்''** (மாற்கு 16 : 16) ஞானஸ்நானத்தின் சிறப்பு நிலையை அறியாமல் மார்க்க உலகம் குழம்பி, பிரிந்து கிடப்பது எத்தனை வேதனை! சிலுவை இல்லாமல் அதற்கு ஒரு சிறப்பும் இல்லை; அதேபோல் விசுவாசமும் மனந்திரும்புதலும் இல்லாமல் சிலுவைக்கு ஒரு சிறப்பும் இல்லை ஞானஸ்நானத்தில் நாம் அடக்கம் செய்யப்படும்போது, நாம் வெளிப்படையாகவும், அடையாளமாகவும் பாவ மன்னிப்புக்கென்று அவருக்குள் மரிக்கிறோம் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார், நாம் ஞானஸ்நானத்தின்போது நம்முடைய பழைய பாவமனுஷனை அடக்கம் செய்து, உயிர்த்தெழுதலினால் அவருடைய சாயலில் இணைக்கப்படுகிறோம். ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கென்று கொடுக்கப்படுகிறது (அப் 2:38) ஏனெனில், இந்த விசுவாச அறிக்கை மூலமாக அவருடைய மரணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய மரணத்தினாலும் இரத்தத்தினாலும் தான் நம்முடைய பாவங்களுக்குரிய பிரயாசித்தம் கிடைக்கும்.

ஞானஸ்நானம் என்னும் ஒரு செயலின் மூலம் கர்த்தரோடு அவருடைய மரணத்தில் இணைக்கப்படுவது எத்தனை மகிழ்ச்சியான காரியம்! சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறக்கிறோம், கீழ்ப்படிதலின் மூலம் நம்முடைய பெருமையைப் பறை சாற்றவில்லை. மாறாக, நாம் கர்த்தரை நேசித்துக் கனப்படுத்துகிறோம். எப்படி ஆபிரகாம் தேவனை நேசித்துக் கீழ்ப்படிந்து தேவனைக் கனப்படுத்தினாரோ அவ்வண்ணமாக நாமும் செய்கிறோம். ஆனாலும் நாம் இரட்சிப்பைப் பற்றி பிரசங்கிக்கும் போது முழுக் கதையையும் சொல்ல வேண்டும். தேவனுடைய கிருபையிலிருந்தும், கிறிஸ்துவினுடைய சிலுவையில் இருந்தும் தொடங்க வேண்டும்.

மாற்கு 19:15,ல் விசுவாசமும் ஞானஸ்நானமும் சொல்லப் படாததற்கு முன்பு, பூலோகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். சுவிசேஷம் என்பது கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம் பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல். ஆக, நம்முடைய ஆத்தும ஆதாயப் பணியை சிலுவையிலிருந்து தொடங்க வேண்டும். தேவனுடைய கிருபையையும் அவருடைய குமாரனின் மரணத்தையும் பிரசங்கிக்க வேண்டும். இது தான் மக்களுடைய மனதை மாற்ற வல்லது. தேவனுடைய அன்பும் கிறிஸ்து தம்முடைய இன்னுயிரை நம்முடைய பாவங்களுக்காக விட்டதும் தான் மக்களுடைய உள்ளத்தைத் தொடும். அதனாலன்றோ "**நான் பூமியிலிருந்து உயர்த்தப்படும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்**" என்றார் இயேசு (யோவான் 12;32) அப்போஸ்தலர்கள் எல்லா சமயங்களிலும் கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையுமே பிரசங்கித்தார்கள். அப்போஸ்தலன் பேதுரு பெந்தே கொஸ்தே நாளில் கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் உருக்கமாகவும், உள்ளத்தை தொடும் வகையிலும் பிரசங்கித்தார். **நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவவயே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார், என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவீர்கள்** என்று கூறியதைக் கேட்டு "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும். என்று இருதயத்தில் குத்தப்பட்டுக் கேட்டனர். (அப் 2:36,37)

ஆகவே, இரட்சிப்பின் திட்டத்தில் தேவனுடை பங்கும், மனிதனுடைய பங்கும் இருக்கிறது. ஒன்றை வலியுறுத்தி மற்றொன்றை புறக்கணிப்பது தேவனுடைய கட்டளைகளை மாமிசமும் மனசும் விரும்புகிற வகையில் பின்பற்றுவதும், போதிப்பதும், தேவ சித்தத்தைப் புறக்கணித்து விட்டு சுய இஷ்டத்தை நிறைவேற்றுவதுமாகும். கடைசி காலத்தில் நியாயம் தீர்க்கிறது ஒன்று இருக்கிறது. அது கிறிஸ்து சொன்ன வசனமே. (யோவான் 12:48)

**E.Z. செல்வநாயகம்**

---

ஆத்துமா வாழ்கிறது போல ......

*பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். 3 யோவான் 2.*

# புத்தாண்டில் எடுக்கவேண்டிய தீர்மானங்கள்

**1. பிறர் முன் எடுக்க வேண்டிய தீர்மானங்கள்?**

''இப்படியிருக்க நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் சகோதரனுக்கு முன்பாக தடுக்கல்களையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள்'' ரோமர் 14:12.

இப் புத்தாண்டில் நாம் செய்ய வேண்டிய முக்கியமான தீர்மானங்களில் இதுவும் ஒன்றாக இருக்கட்டும். அதாவது, யாரும் இடறுவதற்கு நாம் காரணமாய் இருந்து விடவே கூடாது. பிறருக்கு நாம் உதவியாக இருக்கவேண்டுமேயொழிய உபத்திரவமாக இருக்கக் கூடாது லூக் 17:1-2ல் இயேசு இதை அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். ''இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம் ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ அவனுக்கு ஐயோ! அவன் இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறதைப் பார்க்கிலும் அவனுடைய கழுத்தில் இயந்திரக்கல் கட்டப்பட்டு அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டு போவது அவனுக்கு நலமாயிருக்கும்.

நாம் பிறருக்கு இடையூறுகி விடாதபடிக்கு பரிசுத்த வேதாகமத்தில் சில நடைமுறை ஆலோசனைகள் தரப்படுகின்றன. எடுத்துக் காட்டாக பலவீனருக்கு முன்பாக வேண்டுமென்றே அவர்கள் விரும்பாத மாமிசத்தையே அல்லது வேறெதையுமோ புசிக்கக் கூடாது. ''போஜத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால் நீ அன்பாய் நடக்கிறவன் அல்ல; அவனை உன் போஜனத்தினாலேகெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே. ... மாமிசம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும் உன் சகோதரன் இடறுவதற்காவது, தவறுவதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பது நன்மையாயிருக்கும் உனக்கு விசுவாசமாயிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன் மட்டும் இருக்கட்டும். நல்லது என்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்'' (வச 15,21,22)

**2. பிறர் வளர்ந்து பலப்பட உதவி செய்வேன்**

''அன்றியும் பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பத்தி விருத்திக் கேதுவான நன்மை உண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்'' (ரோமர் 15:1,2)

## A) பிறர் வளர உதவி செய்வது எப்படி?

(அ) பிறருடைய பிழைகள் அவர்களுடைய துர்க்குணத்தினால் வந்தது என்று நாம் குற்றம் சாட்டாமல் அவர்கள் பலவீனத்தினால் வந்தது என்று எண்ண வேண்டும் ''இப்படியிருக்க நீ உன் சகோதரனை அற்பமாயெண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயப்பிரமாணத்துக்கு முன்பாக நிற்போமே'' ரோமர் 14:10. பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும் ரோமர் 15:1 அன்றியும் நாம் பலமற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்'' (ரோமர் 5:6) உங்கள் மாமிச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன் (ரோமர் 6:9) ''ஆவி உற்சாகமுள்ளது தான், மாமிசமோ பலவீனமுள்ளது'' (மத் 26:41) மேற்கண்ட வசனங்கள் மிகத் தெளிவாக நாம் எல்லாரும் ஏதாவது ஒரு விதத்தில் பலவீனமுடையவர்கள் என்றும் நம்முடைய பலவீனத்தில் அவருடைய பலம் பூரணமாய் விளங்க ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற சத்தியத்தையும் தெளிவாய் விளக்குகின்றன. ஒருவருக்கொருவர் பலவீனத்தில் அளவில் மட்டுமே வேறுபடுகிறோம். மற்றபடி எல்லாரும் பலவீனர்களே. ஆகவே பலவீனத்தினால் தடுமாடுகிற ஒரு சகோதரனிடத்தில் நாம் எப்படி கடுமையாய் நடந்து கொள்ளலாம்? பிறரோடு பழகும் காரியத்தில் நியாயம் தீர்க்கும் மனப்பான்மையை விட்டொழியுங்கள். இதனால் நாம் பிறர் பாவங்களைக் காணாதது போல் நடந்து கொள்ளவேண்டும். என்பதல்ல. பிறரைக் கரிசனையோடு புரிந்து கொண்டு உதவி செய்ய வேண்டும். ''சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களை சீர் பொருந்தப்பண்ணுங்கள்.''

நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு ஒருவர் பாரத்தை ஒருவர் இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். (கலா 6:1,2)

(ஆ) விசுவாசத்தில் வளர பிறருக்கு அன்போடும், பொறுமையோடும் போதியுங்கள் ''அன்புடன் சத்தியத்தைப் பேசி, தலையாய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளர்கிறவர்களாய் இருக்கும்படி அப்படிச் செய்தார்'' (எபே 4:15) சத்தியம் அன்புடன் பேசப்பட வேண்டும். எல்லாக் கரிசனையோடும், புரிந்து கொள்ளுதலோடும், மேய்ப்பனின் சிந்தையோடும் செயல்பட வேண்டும். அன்பின்றி கிறிஸ்துவுக்குள் இழுக்கப்படும் நோக்கத்தோடு சொல்லப்படாத சத்தியம் அவனை விடுவிப்பதற்குப் பதிலாக பளுவான நுகத்தின் அடிமைத் தனத்துக்குள்ளாக அவனைத் தள்ளிவிடும். இயேசு பலமுறை கடிந்து கொண்டு திருத்தினார். ஆனால்

அவருடைய வார்த்தைகள் கிருபையினால் நிறைந்திருந்தன. நாமும் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுவோமாக!

**3. ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் என்பதைக் கடைப்பிடிப்பேன்.**

''என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தில் நிறைந்தவர்களும் சகல அறிவிலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வல்லவர்களாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்'' ரோமர் 16:14,15.

கனி நிறைந்த கிறிஸ்தவன் நற்குணத்திலும், அறிவிலும் சமநிலையாயிருகிறான். நல்ல இருதயம், அறிவுள்ள சிரம், ஆகவே தான் ரோமபுரி கிறிஸ்தவர்கள் அன்போடு சத்தியத்தைப் பேச முடிந்தது. ஆகவே அவர்கள் ஒருவரையொருவர் கட்டி யெழுப்பி, பக்தி விருத்தியூட்டி, புத்தி சொல்ல முடிந்தது. இங்கு எல்லோரும் ஒருவருக் கொருவர் ஊழியம் செய்தனர். புதிய ஏற்பாட்டுச் சபையில் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் தான் ''சகோதவனாகிய குவர்த்தும் உங்களை வாழ்த்துகிறான்'' என்கிறார் பவுல் (வ 23) சாமான்யனான சகோதரன் குவர்த்தும் முக்கியத்துவம் பெற்றிருந்தான். 11-ம் வசனத்திலும் அப்படியே. ''நர்கீசுவின் வீட்டாரில் கர்த்தருக்குட்பட்டவர்களை வாழ்த்துங்கள்'' என்றுள்ளது. கர்த்தருக்குட்பட்டவர்கள் என்பதைத் தவிர சிறப்பாய் அவர்களைக் குறித்து வேறொன்றுமில்லை. ஆம், கர்த்தருக்குட்பட்டிருப்பதே சிறப்புத் தான். சபையில் அனைத்து அங்கத்தினர்களும் சரி சமம்'' யாவரும் தேவனுக்கு முன் இராஜாக்களும் ஆசாரியருமாயிருக்கிறோம் என்று உணரும் போது தான் ஒவ்வொரு அங்கமும் பங்கேற்று வளர்ந்து கனிதரும் அனுபவத்திற்குள் கடந்து வரும்.

எபி 13:12,13-ல் ''சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குகுள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, ''இன்று'' எனப் படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்'' 'ஒருவனாகிலும்'! 'ஒருவருக்கொருவர்'! 'நாடோறும்'! மிகைப்படுத்தலாகத் தோன்றுகிறதா? ஆனால் அதுவே புதிய ஏற்பாட்டு சபையின் அன்றாட நடைமுறையாக இருக்கவேண்டும்.

**4. உண்மையாய் உழைப்பவர்களைப் பாராட்டுவேன்.**

அப்போஸ்தலன் பவுல் இந்த விஷயத்திலும் கூட சிறந்த முன் மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். ரோமர் 16:3-16; 21-24 ''பிரிஸ்கில்லாளவையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள்

அவர்கள் என் பிராணனுக்காதத் தங்கள் கழுத்தைக் கொடுத்த-வர்கள் .... கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்'' .... கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரிய மான பெர்சியாளை வாழ்த்துங்கள்'' என்ற நீண்டதொரு பட்டி யலையே கொடுத்திருக்கிறார்.

பாராட்டு எவருக்குமே ஓர் ஊக்குவிசை. பாராட்டுவதினால் நாம் ஒன்றும் இழந்து போவதில்லை. ஆனால் பாராட்டப்படு-வோர் அடைவதோ மிக அதிகம். இயேசு ஏழை விதவையையும், நூற்றுக்கதிபதியையும், பேதுருவையும், மரியாளையும், இன்னும் அநேகரையும் பாராட்டியதை சுவிசேஷங்களில் வாசிக்கிறோம். பாராட்டிவிட்டால் பெருமையடைந்து தலையில் நடப்பான் என்-பது தவறான எண்ணம்

சபையின் முன்னோடிகளின் கண் காணிப்புத் திறமைக்காக அவரைப் பாராட்டுங்கள். பிரசங்கியின் பக்திவிருத்தி யூட்டிய செய்திக்கு நன்றி சொல்லுங்கள். ஜெபித்த மூத்த சகோதரனின் கரங்களைப் பற்றிக் குலுக்குங்கள். கர்த்தருடைய காரியங்களில் உற்சாகமாய் ஈடுபடும் வாலிபரைத் தட்டிக் கொடுங்கள். நடத்-துனரைத் கண்டு அருமையான ஆராதனை முழுங்கு முறைகளைக் குறித்த உங்கள் பூரிப்பை தெரிவியுங்கள் ஞாயிறு பள்ளிஆசிரியர்-களின் ஆர்வத்தைச் சுட்டிக்காட்டி ஊக்குவியுங்கள்.

**5. தேவையிலிப்போருக்கு உதவி செய்ய முயல்வேன் :**

கெங்கிரேயா ஊர்சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடையசகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக் கேற்றபடி ஏற்றுக் கொண்டு, எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்-குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன் அவள் அநேகருக்கும் எனக்கும் கூட ஆதரவாயிருந்தவள். (ரோமர் 16; 1,2) தேவையுள்ளோர்க்கு உதவி செய்ய நாம் முயல வேண்டும். அப்படிப்பட்ட பணிகளில் தேவன் பிரியமாயிருக்கிறார். நாம் வாழும் பாழுலகம் பிரச்சனையும், வேதனையும் தேவையும் நிறைந்தது பிறருக்கு நன்மை செய்யவே நம்மை ஆசீர்வதித்திருக்-கிறார். நம் கடன் அவரது கிருபையின் வாய்க்கால் ஆவதே. ''நன் மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக! நாம் தளர்ந்து போகாமல் இருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யா-வருக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்மை செய்யக் கடவோம் (கலா 6:9,10) பரிசுத்தவான்களுடைய குறை வில் அவர்களுக்கு உதவி செய்வதிலும் அந்நியண உபசரிக்க நாடுவதி லும் நமது அன்பு வெளிப்படவேண்டும்.'' (ரோமர் 12:9,13)

ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடையவனாயிருந்து தன் சகோ-தரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளு-வது எப்படி?

என் பிள்ளைகளே வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரி யையினாலும் அன்பு கூரக் கடவோம். (1 யோவான் 2:17,18)

YOUR ATTENTION PLEASE !

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi -110049
Thursdays-7: 15 to 7-30 P. M.
Fridays-- 8: 00 to 8:15 P. M.
Saturdays-8 00 to 8:15 P. M.
Sundays-9 00 to 9: 15 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

Jan 91 THIRUMARAI AASAAN.Regd.No.TN/ERD/49

## தவணைக் காலம் முடிந்து விட்டது

வாசக அன்பர்களே, புத்தாண்டு வாழ்த்துக்கள்

கடந்த ஆண்டு முழுவதும் மாவட்ட வாரியாக முகவரிகளை ஒழுங்குபடுத்தும் வேலைக்கு ஒத்துழைப்புத் தரும்படி விடுத்த வேண்டுகோளை மதித்து ஒத்துழைப்புத் தந்த அனைவருக்கும் நன்றி. மற்றவர்களுக்கு இதழ் வராவிட்டால் உங்கள் முகவரி எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று பொருள். ஆயினும், விரும்பிக் கேட்டால் இதழ் அனுப்பித் தருவோம்.

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE - 638 001.